# காரைக்குடி நகராட்சி

## 30.07.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை திருமதி.கே.எம்.சுதா, தனி அலுவலர்

## மன்றப்பொருள்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 30.07.2021 | 1 | 69. காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக 09.05.1928ல் தொடங்கப்பட்டு முறையே 26.02.1947ல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 25.01.1979ல் முதல் நிலை நகராட்சியாகவும் 14.12.1988 முதல் தேர்வுநிலை நகராட்சியாகவும் செயல்பட்டு தற்போது, அரசாணை எண்.74 நாள்28.05.2013 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகர் 13.75 சதுர கி.மீ பரப்பளவு கொண்டதாகும். 36 வார்டுகளாக நகராட்சிப் பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 1,06,714 ஆகும்.<br>காரைக்குடி புராதன நகரமாகவும், சுற்றுலா தலமாகவும் விளங்குகிறது. செட்டிநாட்டு பாரம்பரிய கலைநயத்துடன் கூடிய வீடுகளை பார்வையிட வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை புரிகின்றனர். நகரை சுற்றியுள்ள சுற்றுலா தலங்களை பார்வையிடவும் பொதுமக்கள் அதிக அளவில் காரைக்குடிக்கு வருகை தருகின்றனர். நகரை சுற்றி 15 கி.மீ சுற்றளவில் அமைந்துள்ள கோவில் தலங்களான பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, அரியக்குடி மற்றும் பட்டமங்கலத்திற்கு பக்தர்கள் அதிகம் வருகின்றனர்.<br>மேலும் மத்திய மின்வேதியியல் ஆய்வுக் கழகம், புகழ்பெற்ற அழகப்பா பொறியியல் கல்லூரி, அழகப்பா பல்கலைக்கழகம் நகரையொட்டி உள்ளதால் உயர்கல்வி பெற இந்தியா முழுவதிலும் இருந்து மாணவர்கள் வருகை தருகிறார்கள். இதனால் தினமும் 50000 நபர்கள் வந்துபோகும் மிக முக்கிய நகரமாக காரைக்குடி விளங்குகிறது. மேலும் காரைக்குடி நகரிலிருந்து சென்னை, திருச்சி, இராமேஸ்வரம் போன்ற நகர்களுக்கு இரயில் போக்குவரத்தும், தமிழ்நாட்டில் பல நகரங்களுக்கு பேருந்து போக்குவரத்தும் உள்ளதால் நகர் வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கிறது. பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு இரண்டு நகராட்சி பேருந்து நிலையங்கள் அனைத்து வசதிகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் கல்வி கற்க 30 எண்ணிக்கையில் நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கி வருகிறது. பொது மக்களின் மருத்துவ சிகிச்சைக்காக அரசு மருத்துவமனை, நகராட்சி மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் இயங்கி வருகிறது. மேலும், இந்நகரில் பித்தளை, சில்வர், வெள்ளிப் பொருட்கள் தாயரிப்பு தொழிற்சாலை உள்ளன.<br>மேலும், இந்நகரில் வியாபாரம் செய்யும் வைரகற்களுக்கு தனிஅங்கீகாரம் உள்ளது. இச்சிறப்பு பெற்ற காரைக்குடி நகராட்சி 93 ஆண்டுகளாக நகராட்சியாகவே உள்ளது.<br>இந்நகரில் குடிநீர் விநியோகத்திற்கு வற்றாத ஜீவநதியாக ‘ சம்பைஊற்று’ என்னும் ஆர்டிஷியன் ஊற்று | தீர்மான எண்.69<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பகுதி உள்ளது. காரைக்குடி நகராட்சியுடன் கீழ்கண்ட பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளை இணைத்து காரைக்குடி நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தலாம்.<br>1. கோட்டையூர் பேரூராட்சி<br>2. சங்கராபுரம் ஊராட்சி<br>3. கோவிலூர் ஊராட்சி<br>4. இலுப்பக்குடி ஊராட்சி<br>5. அரியக்குடி ஊராட்சி<br>6. அமராவதிபுதூர் ஊராட்சி<br>எனவே, காரைக்குடி நகராட்சியுடன் 1 பேரூராட்சி 5 ஊராட்சிகளை ஒருங்கிணைத்து காரைக்குடி நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்திட அரசிற்கு உரிய முன் மொழிவுகள் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:–<br>அனுமதிக்கலாம். | |
| | 1 | 70. காரைக்குடி நகராட்சி சர்வே வார்டு எண்.03, பிளாக் எண்.25, நகரளவு எண்.737/1ஏல் அமைந்துள்ள விஸ்தீரணம் 0.0741.0 ச.மீ பரப்பளவு இடத்தை பி.ஆர்.சுப்பிரமணியன் என்பவருக்கு தவறுதலாக பட்டா வழங்கியதை ரத்து செய்து ப.மு.பி.4966/16 நாள் 27.05.2020ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் வட்டாட்சியர், காரைக்குடி அவர்களுக்கு ஆணையரின் பெயரில் பட்டா மாறுதல் செய்து உத்தரவு வரப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்த்து நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் மேல்முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்து கடிதம் வரப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP.NO.10958 OF 2021 என எண்ணிட்டு நகராட்சி ஆணையர், காரைக்குடி அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார். மேற்படி வழக்கை நடத்தியதற்கான தொகை ரூ.15,000/-ஐ திரு.கார்த்திகைபாலன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும் வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்கு வழக்கிற்கான செலவினத் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4064/2014/எப்1) | தீர்மான எண்.70<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 2 | 71. இந்நகராட்சியில் உள்ள லாப்டெப் 6 வருடங்களுக்கு மேல் ஆனதால் ஆய்வு கூட்டங்களுக்கு மதுரை மற்றும் சென்னை அலுவலகங்களுக்கு எடுத்துச் செல்லும் போது பவர் நீடித்து வருவதில்லை. மாநில நிதிக்குழு PFMS, திட்டப்பணிகள் போன்ற ஆய்வுக் கூட்டங்களுக்கு (ஆணையாளர், பொறியாளர், கணக்கர்) எடுத்துச் சென்று பணி செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, புதியதாக ஒரு லேப்டெப் (LAPTOP) வாங்குவதற்கும், தணிக்கை காலங்களில் தணிக்கை பத்திகளை பிரிண்ட் எடுப்பதற்கு தணிக்கை பிரிவிற்கும், வருவாய் பிரிவில் கேட்பு அறிவிப்பு எடுப்பதற்கு கூடுதலாக ஒரு பிரிண்ட்டர் தேவைப்படுவதால் இரண்டு லேசர் பிரிண்ட்டர் வாங்குவதற்கும், கல்லுக்கட்டி வரிவசூல் மையத்தில் உள்ள டாட்மேட்ரிக் பிரிண்ட்டர் | தீர்மான எண்.71<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பழுதடைந்து தற்போது பழுதுநீக்கம் செய்யப்பட்டு உபயோகத்தில் உள்ளது. எனவே, ஆண்டு இறுதியில் வரிவசூல் அதிகமான நேரங்களில் பழுது ஏற்பட்டால் கூடுதலாக இரண்டு பிரிண்ட்டர்கள் வாங்கினால் அச்சமயத்தில் உபயோகப்படுத்தி கொள்ள, புதிய டாட்மேட்ரிக் பிரிண்ட்டர் வாங்குவதற்கும், அனைத்து கணிணிகளிலும் ஆண்டிவைரஸ் காலாவதி ஆகிவிட்டதால் புதிய ஆண்டிவைரஸ் 30 எண்ணம் வாங்குவதற்கும், கோவிட் காலங்களில் அடிக்கடி காணொளி ஆய்வுக் கூட்டம் நடைபெறுவதால் கூடுதலாக ஒரு வெப்கேமரா மற்றும் ஸ்பீக்கர் வாங்குதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு வாங்கி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.834/2020/இ1) | |
| 3 | | 72. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண். TN63 R 5566-க்கு பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு 14.07.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. Sri Amman Automobiles, Karaikudi - ரூ. 25,150/–<br>2. Sri Solai Raja Auto Carriage, Karaikudi - ரூ.27,700/–<br>3. Sri Balaji Auto Mobiles, Karaikudi - ரூ.30,500/–<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய Sri Amman Automobiles, Karaikudi அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்தததையும் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.72<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 4 | | 73. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகன எண். TN63 T 2437-க்கு வாகன காப்பீடு 30.08.2021ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க ஓரியண்டல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.31382/-ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண்.73<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 5 | | 74. இந்நகராட்சி அலுவலக எதிரில் உள்ள முடியரசன் சாலை நகராட்சி பூங்காவில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு மின் மோட்டார் இயங்காததால் புதிதாக 5HP நீர்மூழ்கி மின் மோட்டார் வாங்குவதற்கு 12.07.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. காசிம் ஸ்டோர்ஸ், காரைக்குடி - ரூ. 60,900/-<br>2. மல்டி மார்கெட்டிங், மதுரை - ரூ, 61,700/-<br>3. ஸ்ரீ ஜெனீஸ்வர் எலெக்ட்ரிக்கல்ஸ், மதுரை - ரூ. 62,400/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய காசிம் ஸ்டோர்ஸ், காரைக்குடி, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.60,900/- | தீர்மான எண்.74<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td rowspan="2">30.07.2021</td><td>6</td><td>75. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN63 R 5566–க்கு புதிதாக டயர்கள் மாற்றும் பணிக்கு 14.07.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. ஜெ டயர்ஸ் அண்ட் அலாய்ன்மெண்ட்,காரைக்குடி. – ரூ. 27,200/–<br>2. தேவி ஆட்டோ ஸ்பேர்ஸ், காரைக்குடி – ரூ.27,600/–<br>3. ஐயனார் டயர்ஸ் அண்ட் டிரேடர்ஸ், காரைக்குடி – ரூ.28,000/–<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஜெ டயர்ஸ் அண்ட் அலாய்ன்மெண்ட் காரைக்குடி, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.75<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>7</td><td>76. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.20452/2020/LA3 நாள் 10.11.2020ன்படி மத்திய அரசின் 15வது நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் 2020-2021ம் ஆண்டிற்கு TIED GRANT நிதியாக முதல் தவணையாக ரூ.13725594/- இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. தொடர்ந்து இரண்டாம் தவணையாக ரூ.13725594/- வரவுள்ளது. மேற்கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி இரண்டு தவணை தொகைகளையும் (ரூ.274.52 இலட்சம்) சேர்த்து கீழ்க்கண்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் தேர்வு செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.244, நாள் 31.12.2020ல் அனுமதி பெறப்பட்டது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. தொகை இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி நகராட்சி ரஸ்தா உரக்கிடங்கு வளாகத்தில் 20 மெ.டன் திறன் கொண்ட எரியூட்டு உலை நிறுவுதல் (ரூ.250.00 இலட்சம் x 75%)</td><td>187.50</td></tr>
<tr><td>2</td><td>BOV வாகனங்களுக்கு புதிய பேட்டரிகள் வாங்குதல்</td><td>15.00</td></tr>
<tr><td>3</td><td>நகராட்சி தலைமை நீரளிப்பு நிலையத்திற்கு 100 எச்.பி மின்மோட்டார் வாங்குதல்</td><td>25.00</td></tr>
</table></td><td>தீர்மான எண்.76<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 4 | செக்காலை சிவன்கோவில் ஊரணிக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் மேம்பாடு பணிகள் செய்தல் | 25.00 |
| 5 | செஞ்சை ஊரணிக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் மேம்பாடு பணிகள் செய்தல் | 25.00 |
| | மொத்தம் | 277.50 |

தற்போது வ.எண்.1ல் கண்டுள்ள எரியூட்டு உலை நிறுவுதல் பணி மேற்கொள்ள உரிய அனுமதி கிடைக்கப் பெறாத நிலை உள்ளதால் அப்பணிக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் (ரூ.187.50 இலட்சம்) கீழ்கண்டுள்ளவாறு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. தொகை இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திடக்கழிவு முதல்நிலை சேகரம் பணிகளுக்கு 2 எண்ணம் LCV வாகனம் வாங்குதல் | 16.00 |
| 2 | திடக்கழிவு முதல்நிலை சேகரம் பணிகளுக்கு 10 எண்ணம் BOV வாகனம் வாங்குதல் | 25.00 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதிதாக ஒரு JCB வாகனம் வாங்குதல் | 37.00 |
| 4 | கழனிவாசல் மற்றும் கணேசபுரம் MCC அருகில் RRC அமைத்தல் | 20.00 |
| 5 | சேர்வார் ஊரணி மற்றும் செஞ்சை MCC அருகில் RRC அமைத்தல் | 25.00 |
| 6 | 5 மெட்ரிக் டன் திறன் கொண்ட மர அறுவை இயந்திரம் (Shredder) வாங்குதல் | 20.00 |
| 7 | குடிநீர் விநியோக பணிகளுக்காக புதிய நீர்மூழ்கி மின்மோட்டார்கள் வாங்குதல் | 20.00 |
| 8 | நகராட்சி தலைமை நீரளிப்பு நிலையத்தில் மேம்பாடு பணிகள் மற்றும் உட்புற சாலை வசதி செய்தல் | 25.00 |
| | மொத்தம் | 188.00 |

அலுவலகக்குறிப்பு:

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 8 | 77. காரைக்குடி இரயில்வே பீடர் சாலையில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் இரும்பு ஆங்கில் | தீர்மான எண்.77 |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் தகடுகளை கொண்டு நாள் வாடகை அடிப்படையில் தற்காலிகமாக நிழல்பந்தல் ஒரு மாத காலத்திற்கு அமைப்பதற்கு ரூ.77,500/-க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.25 நாள் 31.05.2021ல் அனுமதி பெறப்பட்டது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி மேலும் கூடுதலாக 20 நாட்களுக்கு நிழற்பந்தல் இருக்கும்படி நீட்டிப்பு செய்யப்பட்டது. எனவே, கூடுதலான 20 நாட்களுக்குரிய வாடகை தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>கொரனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3415-3/2018/இ1) | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.07.2021 | 09 | 78. இந்நகராட்சியில் செக்காலை மேல்நிலை நீர் தேக்க தொட்டி அருகில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் 15HP நீர்மூழ்கி மின் மோட்டார் பழுதாகி இயங்காததால் அதற்கு பதிலாக புதிதாக 10HP நீர்மூழ்கி மின் மோட்டார் வாங்குவதற்கு 12.07.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. காசிம் ஸ்டோர்ஸ், காரைக்குடி - ரூ. 60,300/-<br>2. மல்டி மார்கெட்டிங், மதுரை - ரூ, 72,600/-<br>3. ஸ்ரீ ஜெனீஸ்வர் எலெக்ட்ரிக்கல்ஸ், மதுரை - ரூ. 73,500/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய காசிம் ஸ்டோர்ஸ், காரைக்குடி, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.60,300/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்.78 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 10 | 79. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி நாளங்காடி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் திரு.J.ஈஸ்வரன் என்பவருக்கு வழங்கப்பட்டு, நடைபெற்று வந்தது. மேற்கண்ட உரிமம் 31.03.2021ல் முடிவடையும் நிலையில் 01.04.2021 முதல் புதிதாக ஏலம் கோரி ஒப்படைக்க இந்நகராட்சியால் 29.01.2021 மற்றும் 18.02.2021 ஆகிய தேதிகளில் பொது ஏலம் நடத்தப்பட்டதில், எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. இந்நிலையில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் கட்டுபாட்டு நடவடிக்கைகள் தேர்தல் ஆணையத்தால் அமுல்படுத்தப்பட்டது. இந்நிலையில் 01.04.2021 முதல் 30.06.2021 வரை மூன்று மாதங்கள் மேற்கண்ட உரிமத்திற்கு சம்மந்தப்பட்ட குத்தைகைதாரரே வசூல் செய்துகொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது.<br>இந்நிலையில் கொரனா தொற்று நோய் காரணமாக அரசால் கடந்த 10.05.2021 முதல் பொது ஊரடங்கு அமல்படுத்திய நிலையில் அண்ணா தினசரி மார்க்கெட் 10.05.2021 முதல் பூட்டப்பட்டு அரசு உத்தரவின்படி பொதுமக்களுக்கு காய்கனி வியபாரிகளின் வாயிலாக வாகனங்கள் மூலமாக வீதிகளுக்கு சென்று வழங்கப்பட்டது. | தீர்மான எண்.79 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட நாளங்காடி கட்டணம் வசூல் 10.05.2021 முதல் இயங்கவில்லை. மீண்டும் 07.07.2021 முதல் தினசரி மார்கெட் நடத்தப்பட்டது.<br>மே மாதம் - 22 நாட்கள்<br>ஜீன் மாதம் - 30 நாட்கள்<br>ஜீலை மாதம் - 6 நாட்கள்<br>58 நாட்கள்<br><br>மேற்படி 58 நாட்கள் அண்ணா தினசரி நாளங்காடி கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் நடைபெறவில்லை.<br>இந்நிலையில் குத்தகைதாரர் திரு.J.ஈஸ்வரன் என்பவரால் சென்னை **உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No.10384/21 தொரப்பட்ட வழக்கிற்கு 28.06.2021ன் தீர்ப்பின்படி இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்களிடம் சட்ட கருத்துரு கோரப்பட்டது.** நீதிமன்ற தீர்ப்பின்படி, சட்ட கருத்துருவின்படியும், ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் மீண்டும் தினசரி மார்க்கெட் இயங்க தொடங்கிய நாள் முதல் தீர்பபின்படி 2-மாத காலத்திற்கு குத்தகைதாரர் வசூல் செய்துகொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.<br>**01.04.2021 முதல் 30.06.2021 வரை - 91 நாட்கள்**<br>**01.04.2021 முதல் 09.05.2021 வரை - 39 நாட்கள் குத்தகைதாரர் வசூல் செய்துள்ளார்.**<br>**மீதம் உள்ள 52 நாட்கள் 07.07.2021 முதல் 27.08.2021 வரை** நீதிமன்ற உத்தரவின்படி குத்தகைதாரர் வசூல் செய்துகொள்ள, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் மேற்படி வழக்கின் தீர்ப்புரையின்படியும் நகராட்சி வழக்கறிஞர் சட்டக்கருத்துருவின்படியும், மேற்படி குத்தகைதாரர் 07.07.2021 முதல் 27.08.2021 வரை வசூல் செய்துகொள்ள அனுமதி வழங்கட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4873/2020/அ1) | |
| | 11 | 80. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் TN63 AY4119 JCB வாகனம் கீழ்கண்டவாறு பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது.<br>1) டர்போ சார்சர்<br>2) ஸ்லாப் ரிங்<br>3) வால்வு எக்ஸாட்<br>4) ஆயில் கூலர் சர்வீஸ்<br>5) நரிங்<br>6) சீல்ட் சிட்ராம்<br>7) KPC ஓவர்ஆயில் ஸ்கிட்<br>8) சீல்ட்கிட்<br>9) ஸ்டிரிங்ராம் சீல் கிட் | தீர்மான எண்.80<br>அலுவலகக் குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>10) JCB கூலட்ட் ஆயில்<br>11) கிரிஸ் 18 கிலோ<br>12) வால்வு எக்ஸ்லைட் இன்வெட்வார்<br>மேற்கண்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,61,000/-க்கும் இப்பணியை காரைக்குடியில் உள்ள ஜெயராஜ் அட்டோ மொபைல் ஏஜென்ஸி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>12</td>
<td>81. சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.WP(MD).NO.8264/2019 மற்றும் WP(MD).NO.11124, 11181 மற்றும் 6487/2019-ன் 09.07.2019ம் தேதிய தீர்ப்புரையின் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் கடித எண்.4739/2017/சி1 நாள் 08.11.2019ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் காரைக்குடி நகராட்சிக்கு கீழ்கண்டுள்ளவாறு (STANDING COUNCIL) நகராட்சி வழக்கறிஞர்களாக நியமனம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th colspan="2">சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் விபரம்</th><th colspan="2">காரைக்குடி மற்றும் தேவகோட்டை நீதிமன்ற நகராட்சி வழக்கறிஞர் விபரம்</th></tr>
<tr><th>ஏற்கனவே பணிபுரியும் வழக்கறிஞர் விபரம்</th><th>புதியதாக நியமனம் செய்யப்படும் வழக்கறிஞர் விபரம்</th><th>ஏற்கனவே பணிபுரியும் வழக்கறிஞர் விபரம்</th><th>புதியதாக நியமனம் செய்யப்படும் வழக்கறிஞர் விபரம்</th></tr>
<tr><td>திரு.பி.மகேந்திரன், உயர்நீதிமன்ற வழக்கறிஞர், 79, வழக்கறிஞர் அலுவலகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை</td><td>திரு.டி.வெங்கடேஷ் பி.ஏ., பி.எல்., த/பெ. துரைராஜ், 38, பாலாஜிநகர், அழகர்கோவில் ரோடு, மதுரை (கைபேசி எண்.9843672288)</td><td>திரு.வி.எஸ்.கிருஷ்ணன் எம்.ஏ., பி.எல்., வழக்கறிஞர், காரைக்குடி. (கைபேசி எண்.984249988)</td><td>திரு.ஆர்.மணிகண்டன் பி.காம்., பி.எல்., த/பெ.ராஜேந்திரன், 5, அருணாச்சலம் செட்டியார் தெரு, செக்காலை, காரைக்குடி. (கைபேசி எண்.7871112112)</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:<br>திரு.டி.வெங்கடேஷ் பி.ஏ., பி.எல்., அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் மற்றும் திரு.ஆர்.மணிகண்டன் பி.காம்., பி.எல்., அவர்களை காரைக்குடி மற்றும் தேவகோட்டை நீதிமன்றங்களிலும் நகராட்சி சார்பாக ஆஜராக (STANDING COUNCIL) நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2740/2021/எப்2)</td>
<td>தீர்மான எண்.81<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.07.2021 | 13 | 82. காரைக்குடி நகராட்சியில் ரூ.112.53 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நகரில் 145.00 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதித்தல், 16.00 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் 31725 எண்ணம் வீட்டு இணைப்புகள் வழங்குதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை 90 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மீதமுள்ள அனைத்து பணிகளையும் வருகிற 31.10.2021க்குள் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்ற வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குதல் பணியின் கீழ் ஆழ்நுழைவுத் தொட்டியிலிருந்து வீட்டு வாசல் வரை கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மற்றும் பெரிய அளவிலான வணிக நிறுவனங்களுக்கும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விரைவாக பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கிட UGSS INTERNAL PLUMBING பணி மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உள்ளது. எனவே நகரில் தற்போதைய நிலையில் உள்ள 26500 குடியிருப்புகளுக்கும் மற்றும் 500 வணி நிறுவனங்களுக்கும் சேர்த்து 27000 இணைப்புகள் வழங்கிட அதற்கான INTERNAL PLUMBING பணிகள் செய்வதற்கு திட்ட மதிப்பீடு ரூ.1890.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட UGSS INTERNAL PLUMBING திட்ட மதிப்பீட்டிற்கு அனுமதியும் மற்றும் இப்பணியை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடும் வழங்கிடக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2870/2021/இ1) | தீர்மான எண்.82 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 14 | 83. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் ஒன்றான் இராஜாஜி பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமம் என உள்ளதை இராஜாஜி பேருந்து நிலையத்தில் பெட்டி வைத்து பூ விற்பனை செய்யும் உரிமம் என மாற்றி அமைக்கப்பட வேண்டும். தற்போது மேற்கண்ட இனத்திற்கு ஆறு முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே இராஜாஜி பேருந்து நிலையத்திற்குள் பெட்டி வைத்து பூ விற்பனை செய்யும் உரிமம் என்பதால் துறை மூலம் வசூல் செய்ய இயலாது. மேற்படி இராஜாஜி பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமம் என்பதை இராஜாஜி பேருந்து நிலையத்தில் பெட்டி வைத்து பூ விற்பனை செய்யும் உரிமம் என மாற்றிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4873/2020/அ1) | தீர்மான எண்.83 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி